**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**

**மன்னர் கல்லூரி (தன்னாட்சி)**

## தமிழிலக்கியத்தில் முத்தொள்ளாயிரம் பெறும் இடமும் முத்தொள்ளாயிர மரபும்

# முத்தொள்ளாயிரப் பாடுபொருள்

**இரா. சம்பத்**

துணைப்பேராசிரியர்

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

புதுச்சேரி.

உலகில் வாழும் அனைத்துப் பொருள்களும் உயிரும் மெய்யும் இணைந்தவை. இது மொழிக்கும் மொழியில் அமைந்த இலக்கியத்திற்கும் பொருந்தும். மானுடம் என்பது உயிரும் மெய்யும் சார்ந்தியங்கும் ஒரு படைப்பாகும். மானுடம் என்பதில் மெய் என்பது வடிவமும் உயிர் என்பது உள்ளடக்கமும் ஆகும். இலக்கிய வகைகள் அனைத்தும் மானுட வகைகளைப் போன்றவைதான். உயிரை உயிரும் மெய்யை மெய்யும் ஆளமுடியாது. பொருள் வெளிப்பாட்டிற்கு ஒரு வடிவம் வேண்டும். பாட்டுக்குப் பாடுபொருளும் வடிவமும் இரண்டு பக்கங்களாக அமைகின்றன.

### சங்ககால பாடுபொருள்

திணை அடிப்படையிலேயே சங்க இலக்கியத்தைப் பிற்கால இலக்கியங்களிலிருந்து பிரித்துக் காட்டியது. திணை, கைகோள், கூற்று, துறை ஆகிய உறுப்புக்கள் திணைப் பாட்டு உருவாகக் காரணமாக அமைகின்றன. எனவே, இவை சங்கக் கவிதையின் பாடுபொருளை முடிவு செய்கின்றன.

## சங்க இலக்கியத் தொகுப்பு

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரு தொகுப்புகளும் சங்க இலக்கியம் ஆகும். இரண்டு தொகை நூல்களிலும் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 2381 ஆகும். இவற்றுள் 1850 பாடல்கள் (80%) அகப்பொருள் பற்றியனவாகும். மற்ற பாடல்கள் புறம் பற்றியன.

## தொகுப்பில் பகுப்பு முறை

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களைத் தொகுத்தோர் பாடற்பொருள் பற்றி அகப்பொருட் பாடல், புறப்பொருட் பாடல் என இருவகையாகப் பகுத்து தொகுத்தனர். அகம், புறம் என்னும் பாகுபாடு சங்கப் பாடல்கள் இயற்றப்பட்ட காலத்தில் இருந்ததற்கான சான்று இல்லை.

### அகம்

ஆணும் பெண்ணும் பார்த்து பழகி கூடி இல்லத்தில் வாழும் வாழ்க்கை முறையே அகப்பொருளாக அமைகிறது. திருமணத்திற்கு முன் ஒழுகும் முறையை களவு என்றும், மணமான பின் ஒழுகும் முறையைக் கற்பு என்றும் கூறுவர்.

### புறம்

அகம் தவிர்த்த பிற மானிடப் பொருள்களைக் கொண்டதாக புறம் அமையும். போர், வீரம், கொடை, சமுதாயம் பற்றிய சான்றோர்களின் அறவுரை, அறிவுரை, கடவுள் ஆகியனவும் புறத்தில் அடங்கும். சங்கப் பாடல்களில் கடவுள் பற்றிய நிகழ்ச்சிகளும் குறிப்புகளும் இடம்பெற்றாலும் கடவுளைப் பாடற் பொருளாகக் கொண்ட பாடல்கள் இடம்பெறவில்லை.

## அகப்பாடலின் பாடுபொருள்

‘நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர்’ (தொல்.பொருள். 1003)

இந்த நூற்பாவில் அகப்பாடல் பற்றிய இரண்டு செய்திகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது அகத்திணைப் பாடலுக்கான பாடுபொருள். மற்றொன்று அகப்பாடலின் பொருள். இடம்பெறும் வடிவம் பற்றியதாகும். உலக வழக்கு மக்கள் வழக்காறோடும் நாடக வழக்கு பாணர் மரபோடும் புலனெறி வழக்கு புலவர் மரபோடும் தொடர்புடையது.

| எண் | மரபு | பாடுவோர் | பாடுபொருள் | வடிவம் |
|---|---|---|---|---|
| 1 | உலக வழக்கு | மக்கள் | திணை தெய்வத்தைப் பரவுதல் | வெறிப்பாடல் |
| 2 | நாடக வழக்கு | பாணர் | இனக்குழுத் தலைவனைப் புகழ்தல் | அகவற்பா |
| 3 | புலனெறி வழக்கு | புலவர் | மன்னர்களை வாழ்த்துதல் | ஆசிரியப்பா |

## செய்யுள் உறுப்பு – பாடுபொருள்

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்கு நெறியின்றி
இதுவாகி இத்திணைக்கு உரிபொருள் என்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்க.

பொருள் வகை என்னும் செய்யுள் உறுப்பு செய்யுளின் உயிராக விளங்கும் பாடுபொருளைக் குறிப்பதாக இளம்பூரணர் எண்ணுவார்.

இன்பமும் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கம் என்று சொல்லப்பட்ட இவை வழுவாத வகையினால் இத்திணைக்கு உரிய பொருள் இதுவென்று ஆசிரியர் ஓதிய உரிப்பொருளன்றி அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனாற் செய்யப்படுவது பொருள்வகை எனப்படும் என்பார் பேராசிரியர்.

## பாடுபொருளை உருவாக்கும் அகத்துறுப்புகள்

திணை, கைகோள், கூற்று ஆகிய செய்யுள் உறுப்புகள் செய்யுளின் பாடுபொருளைத் தீர்மானிக்கும் உறுப்பாக அமைகின்றன.

சங்க இலக்கியம் பிற்கால இலக்கியத்திலிருந்து வேறுபடுவதற்குத் திணையே அடிப்படையாக அமைந்தது. திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலவகை, துறை ஆகிய உறுப்புக்கள் திணைப்பாட்டு வகைமை உருவாகக் காரணமாக அமைகின்றன. இவ்வுறுப்புக்களே திணைப்பாட்டின் பாடுபொருளை முடிவு செய்கின்றன. இதனைத் தொல்காப்பியர் செய்யுளியல் முதற்நூற்பாவில்,

> ‘திணையே கைகோள் கூற்றுவகை எனாஅக்
> கேட்போர் களனே காலவகை எனாஅ’

என்று குறிப்பிடுகின்றார்.

## திணை

அகத்திணை, புறத்திணை என இருவகையாக திணை அமையும். அகப்பொருளுக்கு அடிப்படையாக அமைவன ஆண் பெண் ஆகிய இருவர் சேர்ந்து வாழும் இன்ப வாழ்க்கையாகும். இவ்வின்பத்தின் எதிர்நிலையாகப் பிரிவுத் துன்பம் அமையும். ஆண் பெண் சேர்ந்து வாழும் இன்ப வாழ்க்கையைக் குறிஞ்சியொழுக்கம் எனக் கொண்டனர். இவ்வொழுக்கம் களவு என்னும் கைகோளில் மட்டும் நடைபெறும். ஆண் பெண்ணின் பிரிவு ஒழுகலாற்றைப்

பாலைத்திணை எனப் பொதுவாகக் கொண்டு, அதனைக் களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளிலும் படைத்துக் காட்டுவர். இப்பிரிவு களவினுள் பாலையெனவும் கற்பினுள் பாலை முல்லை மருதம் நெய்தல் எனவும் பகுக்கப்பட்டு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளது. இவ்வாறு நிலைத்துநிற்கும் ஒழுக்கத்தின் அடிப்படையில் ஆண் – பெண்ணின் மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகளை வெளியிடும் வகையில் சங்கப்பாக்களின் பாடுபொருள்கள் அமைந்திருக்கும்.

> ‘யாரு மில்லைத் தானே கள்வன்
> தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
> தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
> ஒழுகுநீ ராரல் பார்க்கும்
> குருகு முண்டுதான் மணந்த ஞான்றே’ (குறுந். 25)

குறிஞ்சித்திணைப் பின்புலமாகக் கொண்டு அமைந்த இப்பாடல் கைகோள் பிரிவுகளில் ஒன்றான களவு வாழ்க்கையினைத் தலைவி கூற்று முறையில் அமைந்துள்ளது. இங்குத் திணை, கைகோள், கூற்று ஆகிய செய்யுள் உறுப்புக்கள் பாட்டின் பாடுபொருளைத் தீர்மானிக்கும் உறுப்புக்களாக அமைகின்றன. சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் மனிதர்களின் உணர்வுகளைத் தனித்தனி பாடல்களில் வெளியிடுவனவாக அமைந்துள்ளன. சங்கப்பாடல்கள் ஒரு பாடலுக்கும் மற்றொரு பாடலுக்கும் தொடர்பில்லாமல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கூற்றுக்குரியதாய் அமைந்திருக்கின்றன. ஒரே புலவர் ஒரு திணைக்குக் கீழ் அல்லது கிளவித் தொகையின் கீழ்ப் பல பாடல்கள் இயற்றியிருப்பினும் அவை ஒன்றோடொன்று பொருள் தொடர்புடையன அன்று. அவை தனித்தனிப் பாடல்களே. எனவே, இயற்கைநெறிக் காலத்தில் இயற்றப்பட்ட பாடல்கள் ஆண், பெண் ஆகிய இருவர்களின் உணர்வுகளைத் தனித்தனிப் பாடல்களில் வெளியிடுவனவாக

அமைந்துள்ளன. பொருள்தொடர்நிலைப் பாடல்களாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காலமும் பாடுபொருள் மாற்றமும்

சங்கப் பாடல்களின் காலம் கி.மு. 200ஆம் ஆண்டு கி.பி. 250 ஆம் ஆண்டு வரையிலும் சங்க மருவிய காலம் கி.பி. 250ஆம் ஆண்டு முதல் கி.பி. 590 ஆம் ஆண்டு வரையிலும் அமையும் என்பார் சிவத்தம்பி. மேலும், சங்க மருவிய காலத்தை கி.பி. 250 ஆம் ஆண்டிலிருந்து 490ஆம் ஆண்டு வரை சங்க மருவிய முதற்காலம் என்றும் கி.பி. 460ஆம் ஆண்டு முதல் கி.பி. 590ஆம் ஆண்டு வரை சங்க மருவிய பிற்காலம் என்றும் பாகுபாடு செய்வார். சங்க காலத்தில் தொல்காப்பியம், திருக்குறள், கலித்தொகை, பரிபாடல் ஆகியன இயற்றப்பட்டதாகவும், சங்க மருவிய பிற்காலத்தில் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டதாகவும் கொள்ளலாம். இலக்கியங்களைக் கால நோக்கில் வைத்து நோக்கும்பொழுது பாடுபொருளிலும் இயற்றும் முறைமையிலும் பாடல்கள் வேறுபடுவதைக் காணலாம்.

‘யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம்தாம் கலந் தனவே’ (குறுந். 40)

இப்பாடல் ஆண் கூற்றில் அமைந்துள்ளது. ஒரு ஆண் தன் மனதில் தோன்றும் உணர்வுகளை இயல்பாக எடுத்துரைக்கின்ற முறைமையில் அமைந்துள்ளது.

நற்றிணை, அகநானூறு ஆகிய தொகுப்புநூல்களின் பாடல்களில் பல மன்னர்களின் புகழை எடுத்துக்கூறுவதற்காக அகப்பொருளை ஒரு உத்தியாகப்

பயன்படுத்துகின்றன. ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகிய தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ள பாடல்கள் வகைப்படுத்தி தொகுக்கப்பட்டுள்ளன. இயல்புத் தன்மை, அகப்புறப்பாடல் மரபு ஒரு விதிமுறையான ஒழுங்குத் தன்மை, அகப்பாடல் மரபைக் கொண்டு அரசனைப் புகழ உத்தியாகப் பயன்படுத்துதல் ஆகியன சங்கப்பாடல்களின் தன்மைகளாக அமைந்துள்ளன. பத்துப்பாட்டு தொகை நூல்களில் அமைந்துள்ள பாடல்கள் அடியளவில் மட்டும் அல்லாமல் பொருள் அளவிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

## தொல்காப்பியம்

சங்க மருவிய காலத்தின் முற்பகுதியில் தோன்றிய தொல்காப்பியம் சங்க கால இலக்கிய மரபுகளையும் சங்க மருவிய கால இலக்கிய மரபுகளையும் பதிவு செய்துள்ளது. தொல்காப்பியர் செய்யுளியலில் குறிப்பிடும் முப்பத்து நான்கு உறுப்புக்களுள் முதல் இருபத்தாறு உறுப்புக்களும் தனிநிலைச் செய்யுளுக்குரியதாக அமைந்துள்ளன.

எண்வகை வனப்புக்களில் வரும் தோல், தொன்மை, விருந்து ஆகியன தொடர்நிலைச் செய்யுளுக்குரியதாக அமைந்துள்ளன. தொல்காப்பியர் இலக்கியத்தின் இலக்கணத்தை முடிந்த முடிவாகக் கருதாமல் வளர்ந்து செல்வது என்ற அடிப்படை உண்மையைப் புரிந்துகொண்டு செய்யுளியலில் இறுதியாக ஒரு நூற்பாவைக் கூறியிருக்கிறார்.

‘செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவஉள எனினும் வந்தவற்று இயலான்
திரிபுஇன்றி முடித்தல் தெள்ளியோர் கடனே’

(தொல்.செய்யு. 1499)

செய்யுள் குறித்து ஆராய்ந்து சொல்லப்பட்ட இலக்கணத்தில் பிழைபட்டன போல சில வழக்கில் வருவதாக இருந்தாலும் அவை முற்கூறப்பட்ட இலக்கணத்தோடு திரிபின்றி முடித்து அமைதல் அறிவுடையோர் கடமையாகும். எண்வகை வனப்புக்களுள் தோல், தொன்மை, விருந்து ஆகிய மூன்றும் தொடர்நிலைப் பாடல்களுக்குரியதாகும். இக்கருத்தினைத் தொல்காப்பியர்,

தொன்மைத் தானே
உரையொடு புனைந்த யாப்பின் மேற்றே
(தொல்.செய்யு. 1493)

இழுமென் மொழியின் விழுமியது நுவலினும்
பரந்த மொழியின் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோல்என மொழிப தொன்மொழிப் புலவர்
(தொல். செய்யு. 1494)

விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே
(தொல். செய்யு. 1495)

என்று குறிப்பிடுவார். புதிய பாடுபொருளுக்கேற்ற புதிய யாப்பு வடிவங்கள் தோன்றுவது இயல்பானதே என்பதனை மேற்குறிப்பிட்ட நூற்பாவால் அறியலாம்.

### சங்க மருவிய காலமும் பாடுபொருளும்

கி.மு. இருநூறாம் (200) ஆண்டுமுதல் கி.பி. இருநூற்று அய்ம்பதாம் ஆண்டுவரை சங்கப்பாடல்கள் காட்டும் பண்பாட்டுக்குரிய காலம் ஆகும். கி.பி. இருநூற்று அய்ம்பதாம் (250) ஆண்டு முதல் கி.பி. ஐந்நூற்று தொண்ணூறாம் ஆண்டு (590) வரை சங்க மருவிய காலமாகக் கருதலாம். இக்காலத்தை கி.மு. 250 –

461 ஆம் ஆண்டுவரை சங்க மருவிய முற்காலம் என்றும், இக்காலத்தில் தொல்காப்பியம், திருக்குறள், கலித்தொகை, பரிபாடல் ஆகியன இயற்றப்பட்டதாகவும் கூறுவர். கி.பி. 460 ஆம் ஆண்டு முதல் கி.பி. 590ஆம் ஆண்டுவரை சங்க மருவிய பிற்காலம் என்றும், இக்காலத்தில் சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழிநாற்பது, ஆசாரக்கோவை போன்ற நூல்கள் இயற்றப்பட்டதாகக் கொள்ளலாம். இவ்வாறு இலக்கியங்களைக் காலநோக்கில் வைத்து நோக்கும்பொழுது யாப்பு மரபிலும் பாடுபொருள் மரபிலும் இயற்றும் முறைமையிலும் பாடல்கள் வேறுபடுவதைக் காணலாம்.

## சங்க மருவிய கால இலக்கியங்கள்

இயற்கைநெறி காலத்தில் காணப்பட்ட இலக்கியங்களில் பாடுபொருள் அகம், புறம் என இருபெரும் பிரிவுகளாகப் பாகுபடுத்தப்பட்டது. இப்பாகுபாடே சங்க மருவிய கால இலக்கியங்களில் சில மாற்றங்களுடன் பின்பற்றப்பட்டது. புறத்தின் கூறுகளாக விளங்கிய வீரமும் அறமும் பதினெண்கீழ்க்கணக்கில் தனிப் பாடுபொருளாக விரிவாக்கப்பட்டன.

திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு, நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னாநாற்பது, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய பதினொரு நூல்களும் புறப்பொருள் கூறுகளுள் ஒன்றாகிய அறம் பற்றியும் களவழி நாற்பது என்னும் நூல் வீரம் பற்றியும் கார் நாற்பது, திணைமொழிஐம்பது, ஐந்திணைஐம்பது, ஐந்திணைஎழுபது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை ஆகிய ஆறுநூல்களும் அகப்பொருள் துறைகள் பற்றியும் எடுத்துரைக்கின்றன. மேற்கூறப்பட்ட பதினெட்டு நூல்களின் தொகுதியைப் பதினெண்கீழ்க்கணக்கு என்பர்.

## மரூஉம் மரபு மாற்றமும்

தமிழ்ச் செய்யுளின் வளர்ச்சிப் படிநிலைகளைக் கவனித்தால் கி.பி. இருநூற்று அய்ம்பதாம் ஆண்டு (கி.பி. 250) சங்க மரபிற்கும் சங்க மருவிய மரபிற்கும் ஒரு பிரிகோடாகவே வருகின்றது. தொல்காப்பியர் தனக்கு முன்பு நிலவிய சங்க மரபினைத் தொகுத்து வகுத்து தருகின்றார். கி.பி. இருநூற்று

அய்ம்பதாம் ஆண்டிலிருந்து காணப்படும் செய்யுளாக்கங்களைப் பார்க்கும்பொழுது பின்வரும் மரபு மாற்றங்களையும் மரூஉவையும் காணலாம்.

1. திருக்குறள், நாலடியார், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற அறநூல்கள் சுட்டும் அறப்போதனை மரபு
2. அக இலக்கியங்களும் புற இலக்கியங்களும் சமுதாயத்தின் உண்மை வழக்கினைப் பிரதிபலிப்பதிலும் ஓர் இலக்கிய மரபாகவே போற்றப்படுகின்ற புதிய படைப்பாக்கமுறை.
3. பத்துப்பாட்டினைத் தொடர்ந்து வரும் சிலப்பதிகாரம், மணிமேகலை சுட்டும் தொடர்நிலைச் செய்யுள் மரபு.
4. முத்தொள்ளாயிரம் சுட்டும் அரசவை இலக்கிய மரபு அக-புறப்பாடல் மரபின் புதிய போக்கு.

**சங்க மருவிய காலத்தின் புதியபோக்கு**

இயல் இசை நாடகம் ஆகிய மூன்றும் இணைந்த மரபே சங்க இலக்கிய மரபாகும். இம்மரபு சங்க மருவிய காலத்தில் மாறத் தொடங்கியது. இசையும் ஆடலும் இயலும் (இலக்கியம்) ஒன்றாக நின்ற நிலை போய் இசைக்குரிய பாட்டு மரபு வேறு, நாடகத்துக்குரிய பாட்டு மரபு வேறு, இயலுக்குரிய பாட்டு மரபு வேறு என்று தனித்தனியே தமிழ் ஆக்கங்களை வகுத்துப் பார்க்கும் மரபு ஒன்று வளரத் தொடங்குகிறது. சமண பௌத்த செல்வாக்குகள் காரணமாக இசைமரபும் ஆட்ட மரபும் தனித்தனியே போக இலக்கிய மரபு என்பது புலவர்களுக்குரிய ஒன்றாக வரையறுக்கப்படுகிறது. இதற்கான பிரதான கா ரணம் அக்காலத்திலே புலமை என்பது சமண பௌத்த சங்கங்களை மையமிட்டு நின்றதுவேயாகும் என்பர் சிவத்தம்பி (2007 : 64). இலக்கியம் இசை, நாடகம் என்ற மூன்று நிலைகளையும் தனித்தனியே பார்க்கும் பார்வை சங்க இலக்கிய காலத்தில் தோன்றவில்லை. சங்க மருவிய காலத்தில் நிலைமை மாறுகிறது. சங்க மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சமண பௌத்த செல்வாக்கு வளர்ச்சியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. புலவர்கள் என்போர் பாணர் மரபிலிருந்து வேறுபட்டவர்களாக வளர்ந்து வந்தனர். புலவர் மரபுக்கு முறையான எழுத்து, கல்வி அறிவு அடிப்படையாக அமைகிறது. புலவன் – அறிஞன் என்ற இந்தச் சமன்பாடு வளர்வதற்கான சமண பௌத்த மதச்சூழல் தமிழ்நாட்டில் ஏற்படுகின்றது. இந்த

இரண்டு மதங்களிலும் துறவிகள் குழுமம் குழுமங்களாகவே இருப்பர். பௌத்த பிக்குகளின் தொகுதி நிலைக்குப் பெயர் சங்கம் என்பதாகும்.

### அறம் என்னும் பாடுபொருள்

பதினெண் கீழ்க்கணக்கு இடம்பெறும் பதினொரு அறநூல்களும் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் ஆகிய மூன்று பிரிவுகளில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறநெறிகளை இயம்புகின்றன. செல்வம் நிலையாமை, , இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, அறன்வலியுறுத்தல், துறவு, கொல்லாமை, சினமின்மை, பொறையுடமை, பிறர்மனை நயவாமை, தீவினையச்சம், புலால் மறுத்தல், ஈகை, பழவினை ஆகிய அறநெறிகளைக் கடைபிடித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபேற்றினை அடையுங்கள் என்று போதனை செய்கிறது.

ஆசாரக்கோவை மக்கள் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய முறைகளை விளக்கிக் கூறுகிறது. மேலும், உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் தொடர்பான வாழ்வியல் நெறிகளைக் குறிப்பிடுகிறது.

வீடு பேற்றினை அடைவதற்குத் தேவையான வாழ்க்கை நெறிகள் அக்கால மக்களின் பண்பாடு போன்ற செய்திகளைப் பழமொழி நானூறு, பழமொழிகள் மூலம் விளக்குகின்றது. அரிய சமயக் கருத்துக்கள் வாழ்க்கையின் உயர்விற்குப் பயன் தருவன என்றும் மெய்யுணர்வு ஒன்றால்தான் வீடுபேற்றினை ஒருவன் எய்த இயலும் என்றும் சிறுபஞ்சமூலம் எடுத்துரைக்கின்றது. உடற்பயிற்சி, விருந்தோம்பல், மக்கட்பேறு, தூது, இரக்க குணம், ஒழுக்கநெறி ஆகியவை தொடர்பான வாழ்க்கைநெறிகளும் கொலை, களவு, பொய், காமம், கள் ஆகியவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகளையும் ஏலாதி குறிப்பிடுகின்றது. அறம்,

பொருள், இனபம் ஆகிய மும்முதற்பொருள் தொடர்பான கருத்துக்களை முதுமொழிக்காஞ்சி தொகுத்துரைக்கின்றது.

### சங்க மருவிய அக இலக்கியங்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள் திருக்குறள் நாலடியார் இரண்டும் உறுதிப் பொருள்களுள் ஒன்றாக ஒரு சிறுகூறாக (திருக்குறள் 250/1330, நாலடியார் 20/400) இன்பம் என்னும் பெயரில் அகப்பொருளை எடுத்துக் கூறுகின்றன. ஆனால், திணைமாலைநூற்றமைப்து, ஐந்திணைஎழுபது, ஐந்திணைஐம்பது, திணைமொழிஐம்பது, கைந்நிலை, கார்நாற்பது என்னும் ஆறுநூல்களும் தனித்தனியே அகப்பொருள் பற்றி மட்டுமே பாடுகின்றன.

### நூற்பெயர்

மேற்காட்டிய ஆறு நூல்களுள் முதல் நான்கும் திணை பற்றிப் பெயர்பெற்று உள்ளன. கார்நாற்பது, அகப்பொருட்கூறாகிய கார் என்னும் பெரும்பொழுது பற்றிப் பெயர் பெற்றது. கைந்நிலை ஐந்திணை ஒழுக்கம் பற்றியது. ஆக, இவை எல்லாம் அகப்பொருள் சார்ந்த திணைபொழுது, ஒழுக்கம் பற்றியே பெயர்பெற்று உள்ளன என்பது சிந்தனைக்குரியது. மேலும், சங்க கால அகப்பொருள் நூல்களைப் போலவே இவையும் பாடல் எண்ணிக்கை பற்றி திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது எனப் பெயர்பெற்றிருக்கக் காண்கிறோம். இவ்விரு கூறுகளும் சங்கமரபு தொடர்ந்து நிகழ்வதைக் காட்டுகின்றன.

### திருக்குறள்

சங்கப்பாடல்கள் யாவும் தனித்தனிப் பாடல்களாக உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கூற்றுக்குரியதாய் அமைந்திருக்கக் காண்கிறோம். ஒரு பாடலுக்கும் மற்றொரு பாடலுக்கும் தொடர்பில்லை. ஒரே புலவர் ஒரு திணைக்கீழ் அல்லது கிளவித் தொகையின் கீழ்ப் பல பாடல்கள் பாடியிருப்பினும் அவை

ஒன்றோடொன்று பொருள் தொடர்புடையன அல்ல. ஒரு துறையின் கண் அல்லது கூற்றின் கீழ் அமைந்த பல தனிப்பாடல்களாகவே உள்ளன. மேலே குறித்த ஆறு அகப்பொருள் நூல்களும் இதே தன்மையுடையனவாய்க் காணப்படுகின்றன. ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு ஆசிரியரால் இயற்றப்பெற்றமை சங்கமரபின் இறுதிக் காலத்தை ஒத்துள்ளது. திருக்குறட்பாடல்கள் நிகழ்ச்சிக்கோவையின் அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளன.

திருக்குறள் காமத்துப்பாலில் இடம்பெற்றுள்ள இருபத்தைந்து (25) அதிகாரங்களும் அகப்பொருளால் தொடர்புபடுத்தப்பட்டு கதைப்போக்கில் அமைக்கப்பட்டிருக்கின்றது இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என இருபிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட தலைவன் தலைவியரைத் தலைமக்களாகக் கொண்டு அவர்களது தொடர் வாழ்க்கையைச் சித்தரிப்பது போல திருக்குறள் இன்பத்துப்பால் அமைந்திருக்கிறது. களவியல் பகுதியில் வரிசைமுறையில் அமைக்கப்பட்டுள்ள தகையணங்குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல், காதற்சிறப்புரைத்தல், நாணுத்துறவுரைத்தல், அலர் அறிவுறுத்தல் ஆகிய துறைகள் மேற்கூறிய கருத்துக்குச் சான்றாக அமைகின்றன.

கற்பியல் என்னும் பகுதியில் வருகின்ற பிரிவாற்றாமை படர்மெலிந்திரங்கல் போன்ற பதினெட்டு துறைகளும் தலைவன் தலைவியரின் தொடர் வாழ்க்கையைச் சித்தரிப்பது போல அமைந்திருப்பதைக் காணலாம். பொருள் தொடர்நிலைப் பாடல் தன்மை முதன்முதல் திருக்குறள் இலக்கியத்தில் இடம்பெறுகிறது. மனித வாழ்க்கை என்பது தனித்தனி நிகழ்வுகள் அல்ல. நிகழ்வுகளின் தொகுப்பும் அல்ல; நிகழ்வுகளின் மூலம் அறிய வரும் மனித உறவுகள் அந்த உறவுகளோடு தொடர்புடையவர்களின் வாழ்க்கைகளை முடிவுசெய்கின்ற முறைமையினைக் காட்டுவதுமாகும். வாழ்க்கை என்பது ஒரு தொகைநிலை அன்று. அது ஒரு தொடர்ச்சி நிலை எனவே, இலக்கியம் மனித உணர்வுகளைத் தனித்தனியே

பாடுவதை விடுத்து மனித வாழ்க்கையினைத் தொடர்நிலையாகப் படைக்கத் தொடங்கியது. இப்போக்கு இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட புதிய மாற்றமாகும்.

## சிலப்பதிகாரம் சுட்டும் தொடர்நிலைச் செய்யுள் மரபு

கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய மூவருக்குமிடையே ஏற்பட்ட உறவுகள் காரணமாக அவர்களது வாழ்க்கையில் நிகழ்ந்த விளைவுகளைக் காட்டுவதாக சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. ஒரு தனிமனிதனோ குடும்பமோ அல்லாமல் ஒரு நாடு முழுவதும் பாதிக்கப்படுவதைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. சிலப்பதிகாரம் மனித வாழ்வை அகம் என்றும், புறம் என்றும் தனித்தனியே பகுத்துப் பார்க்காமல் தொடர்நிலையாக கருதி; முப்பது அலகுகளாகப் பகுத்துத் தொடர்புப்படுத்திப் பார்க்கிறது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் இருபத்திரண்டு (22) காதைகளும் தனித்தனி நிகழ்வுகளாக அமைந்துள்ளன. எனினும் இளங்கோவடிகள் தனது திறமையிலும் சமூக மாற்றத்தின் காரணமாகவும் தனித்தனிச் சம்பவங்களைப் பொருள் தொடர்ச்சியுடைய ஒரு கதையாக மாற்றியுள்ளார். சங்க இலக்கிய மரபின் தொடர்ச்சியாகச் சிலப்பதிகாரத்தைக் கூறும்பொழுது பத்துப்பாட்டின் தொடர்ச்சியாகவே சிலப்பதிகாரத்தைக் காணலாம்.

## அக-புறப்பாடல் மரபின் புதிய வளர்ச்சி

வடமொழி இலக்கியச் செல்வாக்குகள் தமிழிலக்கியத்தின் அமைப்பையும் போக்கையும் மாற்றத் தொடங்குவதற்கு முன்னர் நிலவிய சங்க கால அக – புறத்திணை மரபுகளே தென்னிந்தியா முழுமைக்கும் பொதுவானவைகளாக இருந்தன. சங்க கால இலக்கிய மரபுகளுக்குள்ளே அக – புற இலக்கிய மரபுகள் ஒன்றுடன் ஒன்று இணைவனவாக, குறிப்பாகப் புறத்திணைப் புகழ்ச்சிகளுக்காக அகத்திணை மரபு பயன்படுத்தப்படும் போக்கு உருவானது. நற்றிணை, அகநானூறு ஆகிய தொகுப்புநூல்களின் பாடல்களில் பல மன்னர்களின் புகழை எடுத்துக் கூறுவதற்காக அகப்பொருளை ஒரு உத்தியாகப் பயன்படுத்துகின்றன. ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகிய தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ள

பாடல்கள் வகைப்படுத்தி தொகுக்கப்பட்டுள்ளன. இயல்புத்தன்மை, அகப்புறப்பாடல் மரபு ஒரு விதிமுறையான ஒழுங்குத் தன்மை அகப்பாடல் மரபைக் கொண்டு அரசனைப் புகழ உத்தியாகப் பயன்படுத்துதல் ஆகியன சங்கப் பாடல்களின் தன்மைகளாக அமைந்துள்ளன. பத்துப்பாட்டு தொகைநூல்களில் அமைந்துள்ள பாடல்கள் அடியளவில் மட்டுமே அல்லாமல் பொருள் அளவிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அரச உருவாக்கம் வலுப்பெற்று நிறுவனமயப்படத் தொடங்குகின்றபொழுது அரசப் புகழ்ச்சி புதிய பரிமாணங்களைப் பெறுவதைக் காணலாம்.

கி.பி.இருநூற்றுஅய்ம்பதாம்ஆண்டிலிருந்து ஐந்நூற்று தொண்ணூறாமாண்டு வரை (கி.பி. 250-590) தமிழ்நாட்டில் வலுவற்றுக் கிடந்த அரச நிறுவனம் முதலாம் பாண்டியப் பேரரசின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 560)புதிய எழுச்சியுடனும் பல்லவ மன்னர்களின் எழுச்சியுடனும் (கி.பி. 590) வளருகின்றது. இந்த அரசர்கள் இந்திய நாட்டுக்கே பொதுவான அரசவைப் பாரம்பரியத்தைத் தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தனர். அரசவையில் சமஸ்கிருதமும் தமிழும் ஆதரிக்கப்படுகின்றன. புலவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடுகின்ற மரபு புதிய போக்கினை எட்டுகின்றது. அரசன் தன் வீரச்சிறப்பு காரணமாகவும் ஆளுமைக் கவர்ச்சி காரணமாகவும் பெண்களால் விரும்பப்படுகின்ற ஒருவனாகச் சித்தரிக்கப்படுகின்றான் (சிவத்தம்பி. கா. 2007: 76). பல்லவர் காலத்தின் முற்பகுதி (கி.பி. 560)க்கு உரியனவாகக் கருதப்படும் முத்தொள்ளாயிரத்தைப் பார்க்கும்பொழுது அரசப் புகழ்ச்சியில் தரநிலைப்பட்ட ஒரு மாற்றம் ஏற்படுவதைக் காணலாம்.

## முத்தொள்ளாயிரம் பாடுபொருள்

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களைத் தொகுத்தோர் பாடுபொருள் பற்றி அகப்பாடல் புறப்பாடல் என இருவகையாகப் பகுத்து தொகுத்தனர். முத்தொள்ளாயிரப் பாடல்கள் மேற்கூறப்பட்ட இருநிலைகளில் அமைந்துள்ளன.

## அகப்பாடல் மரபு

உலா இலக்கியக்கூறுகள் கைக்கிளைப் பொருண்மையோடு இணைந்துவரும் புதிய வளர்ச்சியை முத்தொள்ளாயிரம் காட்டுகிறது. அகப்பாடல் முழுவதும் பெரும்பாலான பெண்பாற் கைக்கிளைப் பாட்டுக்களாக அமைந்துள்ளன. தலைவி, தாய், செவிலி, தோழி ஆகிய நான்கு வகையான அகமாந்தர்களும் கூற்று நிகழ்த்துகின்ற முறையில் முத்தொள்ளாயிரப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

> தளையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி
> களையினுமென் கைதிறந்து காட்டேன் – வளைகொடுப்போம்
> வன்கண்ணன் வாண்மாறன் மால்யானை தன்னுடன்வந்
> தென்கண் புகுந்தா னிரா (முத்தொள்ளாயிரம். 106)

பாண்டியன் மேல் காதல் கொண்ட பெண்ணொருத்தி பூச்சூட்ட வந்த தாயிடத்தில் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. அரும்புகள் இதழ் அவிழ்ந்து மலர்ந்திருக்கும் பூமாலையை அணிவிக்க வந்திருக்கும் அன்னையரே! அச்சம் கொள்ளாத தன்மை உடையவனும் வெற்றி பொருந்திய வாளினை உடையவனுமாகிய பாண்டியன் உன் கைவளையல்களைக் கவர்ந்து போய்விட்டான். இப்போது பெரிய யானையின் மீது ஏறிவந்து நேற்றிரவு என் கண்ணுக்குள் புகுந்துவிட்டான். அதனால் என் உயிர் பிரிந்தாலும் கண்களை மூடிய கையை எடுத்து அவனை வெளியே விட்டுவிடமாட்டேன் என்பது இப்பாடலின் பொருள்.

## உலா இலக்கிய மூலக்கூறு

> ‘ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
> வழக்கொடு சிவணிய வகைமை யான’
> (தொல். புறத். 25)

எனும் தொல்காப்பிய நூற்பா உலா இலக்கிய வகைமைக்கு மூலக்கூறாக அமைந்துள்ளது. 'ஊரின்கண் காமப்பகுதி நிகழ்தலும் உரித்து என இதற்கு உரைகூறும் இளம்பூரணர் ஊரொடு தோற்றம் என்பது பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது... அவரவர் பருவத்திற்கு ஏற்பக் கூறும் வகைமைச் செய்யுள் என்று விளக்கம் தந்துள்ளார் (தொல். பொருள். அகத்திணை. 27, 28). சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கியக் காலம் வரையில் பல்வேறு இலக்கியங்களில் உலா வகைமைக்கூறுகளாகப் பயின்று வந்துள்ளன. பாட்டுடைத் தலைவனைக் கண்டு பெண்கள் மயங்கலும் அவனைக் காண அவர்கள் வீதி நிறைதலும் பருவப் பெண்களின் இயல்பும் நிலையும் செயலும் காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் தொடர் வளர்ச்சி பெற்றுள்ளன. மகளிர் விளையாட்டுக்களும் பொழுதுபோக்குகளும் சங்ககால இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலனைக் காதலால் கொண்டேத்தும் கிழமையான் என்று கண்டேன் பாராட்டுகின்றனர். சேரன் செங்குட்டுவன் வடதிசைப் போரில் வென்று நாடு திரும்பியபோது அவனை வாழ்த்திய ஐந்திணை மக்களின் பாராட்டுரை உலாத் தலைவனுக்கு உரைக்கப்படும் உரையாக அமைந்துள்ளது. மணிமேகலையில் மதங்கொண்ட யானையை அடங்கிய உதயகுமாரன் அதன்மீது உலாப்போன சிறப்புப் பாடப்படுடுள்ளது. மணிமேகலையை அடுத்து இயற்றப்பட்ட பெருங்கதையில் வாசவதத்தையைத் தூக்கிக்கொண்டு சயந்தி நகருக்குத் தேரேறி வருகின்ற உதயணனின் தோற்றமும் அழகும் அவ்வுலாக் கண்டு மயங்கிய பெண்கள் நிலையும் நகர்வலங்கண்டது எனும் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

தலைவன் உலா வரல் அவன் தோற்றப்பொலிவு, எழுபருவப் பெண்கள் வீதி நிறைதல், உலாக்கண்ட அவரது நிலை, இயல்பு செயல் என்பன போன்ற உலா இலக்கியத்தின் தலைமைக் கூறுகள் முதன்முறையாகப் பெருங்கதையில் விரிவாகப்

பேசப்படக் காணலாம். பெருங்கதைக்குப் பின்னர் இயற்றப்பட்ட சீவகசிந்தாமணி கம்பராமாயணம் முதலியவற்றில் இதன் தொடர்ச்சியைக் காணலாம்.

**உலா இலக்கிய வகைமையின் வளர்ச்சி**

உலா இலக்கியக் கூறுகள் கைக்கிளைப் பொருண்மையோடு இணைந்துவரும் புதிய வளர்ச்சியை முத்தொள்ளாயிரம் காட்டுகிறது. பாண்டியன் உலாவரும்போது அவனைக் காணவிடாது மகளைத் தாய் காவல் செய்யும் காட்சியும் (பாடல் எண். 33, 35), பாண்டிய மன்னனைக் காணாமையால் தலைவி வருந்துவதும் (பாடல் எண். 24, 29, 33, 37, 48, 60, 61), கதவுத்துளை வழியாக அவன் உலா வருதலைக் காணலும் (பாடல் எண். 49), பின் அவனுக்காக ஏங்கலும் (பாடல் எண்கள். 34, 36, 39, 43, 44, 47, 53, 58), அவன்பால் தோழியையும் நெஞ்சையும் வாடைக்காற்றையும் தூது விடுத்தலும் (பாடல் எண். 32, 45, 47), பாண்டிய மன்னன் தலைவனாக அமையும் உலாக் காட்சிகளாகும்.

எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅல் நெடுநல்வேல் மாறன் – உலாஅங்கால்
பைய நடக்கவுந் தேற்றாயால் நின்பெண்மை
ஐயப் படுவ துடைத்து (முத்தொள்ளாயிரம். 119)

இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. இளமைத் தன்மை உடைய பெண்யானையே! எங்கள் மதுரை நகரின் மன்னனாகிய புலால் நாற்றம் கமழும் நீண்ட நன்மை பொருந்திய வேலினை உடைய பாண்டியன் மாறன் உன்மேல் ஏறி உலாவரும் போது மெல்ல நடப்பதுதான் சிறந்தது என்பதை அறியாமல் செல்கின்றாய். அப்படிச் செல்வதானால் உன்னுடைய பெண்மையாகிய மென்மைத் தன்மை ஐயப்படும்படியாக இருக்கிறது என்கிறாள் தலைவி.

சோழன் உலாவரும்போது அவனைக் காணவந்த நங்கையர்க்கு இடங்கொடுங்கள் என்று வேண்டுவதும் (85), சோழன்பால் தான் உற்ற காதலைத் தோழியிடம் உரைப்பதும் (88, 91, 93, 95, 99, 105, 106), சோழன் உலாவரும் காட்சியைப் பலகணி வழியாகப் பார்த்த மகளிர் நிலையும் (87), உலாக் காட்சிகளின் கருத்து வளர்ச்சியைச் சுட்டுவனவாகும். அன்றியும் காமமிக்க கழிபடரால் நெஞ்சோடு புலம்பலும் (97, 100), நெஞ்சைத் தூது விடுத்தலும், வாடையையும், நாரையையும் தூது வேண்டலும் (96, 102) உலாவோடு இணைந்த தூது இலக்கிய வகைமைகளாக அமைந்துள்ளன.

அன்னையுங் கோல்கொண் டலைக்கும் அயலாரும்
என்னை யழியுஞ்சொற் சொல்லுநர் - நுண்ணிலைய
தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
திண்டேர் வளவன் திறத்து (முத்தொள்ளாயிரம். 56)

இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. வலிமையான தேர்ப்படையைக் கொண்ட சோழமன்னனின் பொருட்டாக ஊரார்கள் எல்லாம் என்னைஅவர் கூறித் தூற்றுகின்றனர். என்னுடைய அன்னையும் சிறிய கோலை எடுத்துக்கொண்டு என்னை அடித்துத் துன்புறுத்துகிறாள். நுண்ணியதாகத் தேங்காயைப் பற்றிய தேரைநோய் தேங்காயை அரிக்க அதற்குக் காரணமாய்த் தேரையைக் கூறுவதுபோல நானும் சோழமன்னனால் இன்பம் பெறாமலேயே பழியை ஏற்றுக் கொண்டேன் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

சேரன் உலாவருங்கால் காணவிடாத செவிலியர்க்கும், காணவிரும்பிய காரிகையர்க்கும் பூசல் நிகழ்தலும் (117), தலைவியர் நெஞ்சம் அழிதலும் (119, 120, 128, 130), அவர் நெஞ்சோடு புலம்பலும் (122), நெஞ்சையும் தோழியையும் தூதாக விடுத்தலும் (124) சேரன் தலைவனாக அமையும் உலாவியலின்

பொருண்மைகளாகும். உலாவினைக் காணவிடாது கதவை அடைத்தல், இற்காப்புச் செய்தல், உலாக்கண்டு காமமிகு கழிபடரால் புலம்பல், தலைவி தன் நெஞ்சையும் பிற பொருள்களையும் தூது விடுத்தல் என்பன உலா இலக்கிய வகைமைகளின் வளர்ச்சியில் புதிய முயற்சியைச் சுடடுகின்றன. மேலும், இவை உலா – தூது இலக்கிய உறவையும் காட்டுகின்றன.

> கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
> லடைத்தா டனிக்கதவம் அன்னை – யடைக்குமேல்
> ஆயிழையாய் என்னை யவன்மே லெடுத்துரைப்பார்
> வாயு மடைக்குமோ தான்

இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. அழகிய அணிகலன்களைத் தெரிந்தெடுத்து அணிந்திருப்பவளே! கடல் போன்ற படையினை உடையவனும் கோதை என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவனுமாகிய சேரமன்னனைக் காணவிடாமல் தாயானவள் வீணாக அழகுமிக்க கதவினை அடைத்துவைத்தாள். அவ்வாறு அடைப்பவளால் என்னையும் சேரமன்னனையும் இணைத்துப் பேசும் ஊரார்களின் வாயினையும் அடைக்கும் திறன் பெற்றவளா? அறியாமை உடையதாக இருக்கிறது அவளது செயல் என்கிறாள் தலைவி.

கைக்கிளை என்பது ஒருதலைக்காமம், அது இருவகைப்படும். அவை ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என்று கூறப்படும். ஆண்பாற் கைக்கிளை என்பது தலைவி தன்பால் அன்பு செலுத்தி காதலிப்பதற்கு முன், தலைவன் அவள்பால் அன்புசெலுத்தி காதல் விருப்பத்தால் காமம் மிகுதி கொள்வதல் ஆகும். பெண்பாற் கைக்கிளை என்பது தலைவன் தன்பால் அன்பு

செலுத்தி காதல் கொள்வதற்கு முன், தலைவி அவன்பால் அன்புசெலுத்தி காதல் கொண்டு காமம் கொள்வதாகும்.

இவ்விரு வகையில் முத்தொள்ளாயிரம் நூலில் இடம்பெற்றிருக்கும் அகப்பாடல் முழுமையும் பெண்பாற் கைக்கிளை பாடல்களாகவே அமைந்துள்ளது.

## புறப்பாடல்கள்

சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடைய வீரத்தைப் பற்றி கூறுவதாக முத்தொள்ளாயிரத்தில் இடம்பெற்றுள்ள புறப்பாடல்கள் அமைந்துள்ளன. மன்னர்களுடைய நாடு, நகரம், யானைமறம், குதிரைமறம், வெற்றி, வீரம், கொடை, திறைப்பொருள், திறைப்பொருள் கொள்ளல், மன்னர்கள் பிறந்தநாள் விழா முதலியனவற்றைப் பாராட்டி புகழ்வனவாய் அமைந்துள்ளன. இந்நூல் மன்னர்களைப் பற்றி பெயர், குலம், முதலியனவற்றால் சுட்டாது, பொதுப்படவே கூறிச் செல்கிறது. சேரனைப் பற்றி கோதை, மாந்தைக்கோ, குடநாடன், வாஞ்சிக்கோ, வானவன், கோமான் என்றும், சோழனைப் பற்றி உறந்தையர்கோன், கோழிக்கோமான், வளவன், செம்பியன், கிள்ளி, நீர்நாடன், சென்னி, காவிரிநீர்நாடன் என்றும், பாண்டியனைப் பற்றி மாக்கடுங்கோன், மாறன், கூடற்கோமான், தென்னன், செழியன், வழுதி, கொற்கைகோமான் என்றும் ஆசிரியர் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது.

## துணைநூற்பட்டியல்

இராசா. கி. 2012. இலக்கிய மரபியல். திருச்சிராப்பள்ளி: பார்த்திபன் பதிப்பகம்.

கதிர் முருகு (உரை). 2007. முத்தொள்ளாயிரம். சென்னை: சாரதா பதிப்பகம்.

சிவத்தம்பி கார்த்திக்கேசு. 2007. தமிழின் கவிதையியல். சென்னை: குமரன் புத்தக இல்லம்.